28-09-2021
O.S. 296/2018
வா.சா. 1 திரு.ராஜேந்திரன்

வா .சா. 1 சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை..

நான் எஸ் எஸ் எல் சி வரை படித்திருக்கிறேன். 1,2 பிரதிவாதிகள் அலுவலகத்தில் வைத்து ஒரு நாள் காலையிலிருந்து மாலைவரை ட்ரெயினிங் கொடுத்தார்கள். அதற்கு நான் பணம் எதுவும் கட்டவில்லை. வழக்கு சம்மந்தப்பட்ட மெஷினெரியை நான் வாங்குவதற்கு முன்பாக எங்கள் நிறுவத்தில் ஜெகதீசன் என்பவர் ஒரு பார்ட்னராக இருந்தார் என்பது சரிதான். எந்திரங்களை வாங்குவதற்கு என்னிடம் பணம் இல்லை என்று சொல்லி 1,2 பிரதிவாதிகளே மேற்படி ஜெகதீசனுக்கு ரூபாய் 8 லட்சம் அனுப்பியதாக சொன்னால் அது ஜெகதீசனுக்குத்தான் தெரியும். எந்திரங்களை வாங்க விலை பேசியது, ஜெகதீசுதானா என்றால் நாங்கள் இருவரும் போய்தான் பேசினோம். ரூபாய் 8 லட்சம் 1 ம் பிரதிவாதிக்கு எங்கிருந்து அனுப்பினீர்கள் என்றால் எங்கள் நிறுவனத்தின் வங்கி கணக்கிலிருந்து அனுப்பினோம். அது யூனியன் பேங்க் ஆப் இந்தியா. எங்கள் நிறுவனத்திலிருந்து 1 ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு அனுப்பிய பணம் எங்கிருந்து வந்தது என்றால் எங்கள் நிறுவனத்தின் வங்கி கணக்கில் போடப்பட்டிருந்த பணத்தை அனுப்பினோம் மேற்படி ஜெகதீசுதான் எங்கள் நிறுவன வங்கி கணக்கில் அந்த பணம் ரூபாய் 8 லட்சத்தைடெபாசிட்செய்தார் என்பதனை மறுக்க முடியுமா என்றால் அவர் டெபாசிட் செய்யவில்லை. எங்கள் வங்கி கணக்கு சம்மந்தப்பட்ட விபரம் என் கைவசம் இருக்கிறது அதனை கோர்ட்டில் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். எந்திரங்களை அமைத்த பின்னர் 4 ம் பிரதிவாதி வந்து பார்த்து விட்டு அது சரியாக இருக்கிறது என்று சொன்ன பின்னர்தான் பைனல் செட்டில்மெண்ட் மற்றும் தள்ளுபடி ஆகியவை செய்யப்பட்டதா என்றால் இல்லை. 4 ம் பிரதிவாதி நிறுவனத்தினர் எந்திரங்களை வந்து பார்க்கவில்லையா என்றால் வந்து பார்த்தார்கள். பார்த்தபின்னர்தான் பைனல் செட்டில்மெண்ட் ஆனதா என்றால் 4 ம் பிரதிவாதி வந்து பார்த்த போது மின்சாரம் சப்ளை இல்லை. பிப்ரவரி மாதத்தில் தான் 3 பேஸ் லைன் கிடைத்தது. எந்திரம் எங்கள் இடத்திற்கு எப்போது வந்தது என்றால் ஆகஸ்ட், செப்டம்பர் 2014 ல் வந்தது. எந்திரம் பொருத்தப்பட்ட பின்னர் எத்தனை மாதம் கழித்து அது ஓடவில்லை என்று புகார் செய்தீர்கள் என்றால் பிப்ரவரி மாதத்தில் மின்சாரம் வந்தது. அப்போது எந்திரத்தை பொருத்தினார்கள். அப்போதே இயக்கி பார்த்த போது ஓடவில்லை என்று தெரியவந்தது.

பெங்களுர்காரர்களுக்கு எப்போது புகார் செய்தீர்கள் என்றால் பிப்ரவரி கடைசி வாரத்தில் புகார் செய்தோம். அதனை நேரில் தெரிவித்தோம். ஆகஸ்ட் மாதத்தில் மெசின் வந்ததாக சொன்னால் தவறா என்றால் அப்போதே மெசின் வந்து விட்டது ஆனால் மின் இணைப்பு கிடைக்கவில்லை. மெசின் வந்து அதன் பின்னர்தான் மின்சாரம் இணைப்பு கிடைத்து மெசினை இயக்கி பார்த்ததாக பிராதில் சொல்லாததற்கு காரணம் உண்டா என்றால் மெசின் ஓடாததால் பிராதில் சொல்லவில்லை. வா.சா.ஆ 5ல் 27-2-2016 ல் ஏழு மெசின்கள் சரியாக ஓடுவதாகவும் 3 மெசின்களில் தொந்தரவு இருப்பதாகவும்புகார்கொடுத்து 1 முதல் 3 பிரதிவாதிகளின் பிரதிநிதிகள் வந்து சரிபார்த்ததாக சொல்லப்பட்டிருக்கிறதா என்றால் அப்போதுதான் எந்திரம் பொறுத்தப்பட்டது. 1 முதல் 3 பிரதிவாதிகள்தான் அந்த பதிலை கொடுத்தார்கள். மூன்று மெசின்கள்மட்டும் ஓடவில்லை என்று வா.சா.ஆ 5ல் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை 10 மெசின்களும் ஓடவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு இருந்த குறைபாடு அப்போதே அவர்களால் சரிசெய்யப்பட்டு விட்டதாக சொல்வது சரியல்ல. மெசின்களை சரிசெய்வதற்காக சீனாவிலிருந்து சம்காய் கம்பெனிகாரர்கள் வந்தார்களா என்றால் வந்தார்கள். அவர்கள் சேலத்தில் எத்தனை நாட்கள் இருந்தார்கள் என்றால் எங்கள் வீட்டிற்கு வந்து மெசின்களை பார்த்து விட்டு இரண்டு மணி நேரம் இருந்தார்கள். அவர்கள் சேலத்தில் தங்கினார்கள் என்பது எனக்கு தெரியாது. சீன இஞ்சினியர்கள் ஏதாவது எழுதி கொடுத்தார்களா என்றால் எழுதி கொடுக்க மறுத்து விட்டார்கள். எந்திரங்கள் செய்யும்போதே சரியாக செய்யாமல் விட்டுவிட்டதாக வழக்கிற்காக ஜோடனை செய்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. சீன இ்ஞ்சினியர்கள் வந்த போது அவர்களை மெசினை பார்க்க நான் அனுமதிக்கவில்லை என்றும் அதனால் அவர்கள் வெளியிலிருந்தே மெசினை பார்த்து விட்டு அவைகள் நல்ல நிலையில் இயங்குவதாக 1ம் பிரதிவாதிக்கு ரிப்போர்ட் செய்து விட்டு சென்று விட்டதாக சொல்வது சரியல்ல. பர்ச்சேஸ் ஆர்டர் யார் கொடுத்தது என்றால் நாங்கள் தான் கொடுத்தோம் அது கையெழுத்து போட்டு கொடுக்கவில்லை வாய் மொழியாக கொடுத்தோம். 1ம் பிரதிவாதி அலுவலகத்திற்கு நான் நிறைய தடவைகள் சென்றிருக்கிறேன். அலுவலகத்தில் இருந்த மாதிரி மெசின்களை நான் பார்த்தேன் அவைகளை வைத்துதான் எங்களுக்கு பயிற்சி கொடுத்தார்கள். 4ம் பிரதிவாதி சப்சிடி எவ்வளவு கொடுத்தார்கள் என்றால் ரூபாய் 7,18,000/- கொடுப்பதாக சொன்னார்கள். மெசின் ஓடாததால் கொடுக்கவில்லை. மெசின் வந்தபின்னர் 4ம் பிரதிவாதியிடமிருந்து எவ்வளவு பணம் வாங்கினீர்கள் என்றால் மெசினுக்காக ரூபாய் 14,90,000/- வாங்கினோம். மெசின் வந்து பொருத்தி 4 மாதங்கள் கழித்துதான் ஓடவில்லை என்று புகார்

செய்தீர்கள் என்றால் சரியல்ல. மெசின்களை இயக்குவதற்கு தொழில்நுட்பம் தெரிந்த



ஆட்களை வேலைக்கு வைத்திருக்கிறீர்களா என்றால் நாங்களே பயிற்சி எடுத்திருக்கிறோம். மெசின் ஓடாததால் யாரையும் வைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. 4 ம் பிரதிவாதி எங்களுக்கு ஜெனரேட்டர் வாங்க லோன் கொடுத்தார்கள். மெசின்கள் வரும்போதே ஜெனரேட்டர் வந்து விட்டதா என்றால் மெசின் வருவதற்கு முன்பாகவே வந்து விட்டது. ஜெனரேட்டரை வைத்துக்கொண்டு எவ்வளவு நாட்கள் மெசினை ஓட்டினீர்கள் என்றால் மெசினைஇயக்கவில்லை. தற்போது மெசின் மற்றும் ஜெனரேட்டர் எங்கு இருக்கிறது என்றால் மெசின் எங்கள் வீட்டில் இருக்கிறது.ஜெனரேட்டரை விற்பனை செய்துவிட்டோம். ஜெனரேட்டரை விற்பதற்காக 4 ம் பிரதிவாதியிடம்அனுமதி எதுவும் வாங்கினீர்களா என்றால் இல்லை. மெசின்கள் 10 ஐயும் வைப்பதற்கு எவ்வளவு இட வசதி தேவை என்பது எனக்குதெரியும். கம்பெனியில் சொன்னபடி எவ்வளவு விஸ்தீரணம் தேவையென்றால் கம்பெனியில் அது குறித்து எதுவும் சொல்லவில்லை. 715 சதுரடியில் ஒரு வீடு கட்டினோம். அது முதல் தளம் உடையது. முதல் தளத்தில் பெங்களுர்காரர் கொடுத்த மெசினை வைத்தோம். 2 ம் தளத்தில் ஜெனரேட்டர் மற்றும் கம்ப்ரஸர் வைத்தோம். வெளிநாட்டில் எனக்கு கஷ்டமர்கள் இருப்பதாக சொல்லும் தாங்கள் எந்தெந்த கம்பெனி தங்களிடம் கஷ்டமராக இருந்தார்கள் என்றால் நிறைய கம்பெனிகள் இருக்கிறது. வெளிநாட்டில் இருந்து எந்த கம்பெனியாவது எழுத்து மூல ஒப்பந்தம் செய்திருக்கிறார்களா என்றால் செய்திருக்கிறார்கள். அதனை 4 ம் பிரதிவாதியிடம் கொடுத்திருக்கிறேன். மேற்படி மெசின்களை 715 சதுரடியில் அமைக்க முடியாது என்றும்அவைகளை சரியான விஸ்தீரணத்தில் நான் பொருத்தவில்லை என்றும் சொல்வது தவறு. 1 முதல் 3 பிரதிவாதிகள் எந்திரங்கள் ஓடுகின்ற நிலையில்தான் பொருத்தியதாகவும்அவைகளை எனக்கு தொடர்ந்துஇயக்க தெரியாததால் அவைகள் ஓடவில்லை என்று சொல்லி வருகிறேன் என்பது சரியல்ல. எந்திரங்கள் வேறு யாரையாவது நிபுணர்களை அழைத்து வந்து காட்டினீர்களா என்றால் இல்லை. 1 ம் பிரதிவாதியிடம் ஜெகதீசன் மூலமாக ரூபாய் 8 லட்சம் பெற்றுத்தான் நான் முன் பணம் கட்டியதாக சொல்வது தவறு. 4 ம் பிரதிவாதி எப்போதாவாது எந்திரங்கள் பழுது என்று சொல்லியிருக்கிறார்களா என்றால் மே 2016 மற்றும் ஜுலை 2016 லும் சொல்லியிருக்கிறார்கள். 4 ம் பிரதிவாதி நிறுவனத்தினர் அவ்வாறு எந்திரங்கள் பழுது என்று சொன்னார்களா என்றால் எந்திரங்கள் பழுது என்று சொல்லும் தகுதி எங்களுக்குத்தான் இருக்கிறது கேள்வி தவறாக கேட்கிறீர்கள் என்று சாட்சி கூறுகிறார். 4 ம் பிரதிவாதி நிறுவனத்தினர் பழுது என்று சொல்லவில்லை. எந்திரங்கள் ஓடக்கூடிய நிலையில் தான் இருந்ததாக சொல்வது தவறு. 4 ம் பிரதிவாதி சொன்னபடி பணம்

முழுவதையும் கொடுத்து விட்டார்கள். தள்ளுபடியை கழித்து கொண்டு தான்



கொடுத்தார்களா என்றால் மெசின் ஓடாததால் தள்ளுபடி எதுவும் கொடுக்கவில்லை. மேற்படி எந்திரங்கள் பொருத்தப்படுவதற்குமுன்பாக ஏற்றுமதியாளர்களிடம் எனக்கு தொடர்புஇருந்தது. எந்தெந்த கம்பெனி என்றால் நிறைய கம்பெனி ஆகும். அவைகளில் சில லூம்ஸ் இண்டியா, நிவாஸ்பேஷன், நடராஜ்டெக்ஸ், யுவராஜ் டெக்ஸ், விஸ்வநாதன் டெக்ஸ். மேற்கூறிய கம்பெனிகளுடன் ஏற்றுமதி தொடர்பு இருக்கிறதுஎன்பதை காட்ட ஆவணம் இருக்கிறதா என்றால் தற்போது இல்லை. எங்களுடன் ஏற்றுமதியாளர்களுடன் எப்போதும் தொடர்பு இருந்ததில்லை என்பது தவறு. எனக்கும் பங்குதாரர்களாக இருந்து விலகிய ஜெகதீசனுக்கும் இடையில் நல்ல உறவு இருக்கிறது என்றால் நல்ல உறவு இருக்கிறது. நஷ்டஈடாக எந்த தொகையும் கேட்பதற்கு எனக்கு அருகதை இல்லை என்றால் முழு அருகதை உண்டு. நஷ்டஈடு தொகை ஒரு கோடியே பன்னிரெண்டு லட்சத்தி நாற்பத்தி மூன்றாயிரத்து நானூறு எதனை வைத்து நிர்ணயம் செய்தீர்கள் என்றால் மெசின் வாங்கிய வகையில் 22,95,000/- மானியம் இழப்பு ரூ7,18,000/- வட்டி நஷ்டம் 10,40,400/- வருமான இழப்பு ரூ 72 லட்சம் ஆகும். இயந்திரங்க்ளுக்குரிய தொகையை சீனா செங்காய் கம்பெனிக்குத்தான் அனுப்பினீர்களா என்றால் பெங்களூர் மேக்ரோ ஏஜென்சிற்கு அனுப்பினோம். மேற்படி தொகையை சீன கம்பெனிக்கு 1ம் பிரதிவாதி அனுப்பி விட்டார்கள் என்பது தெரியுமா என்றால் எங்களுக்கு எப்படி தெரியும். இயந்திரங்களை வாங்கி கொடுத்த ஏஜெண்டிடம் இழப்பீடு கோர முடியாது என்றும் எந்திரங்களை தயாரித்தவர்கள்தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டிருப்பதாகவும் சொன்னால் 1ம் பிரதிவாதிதான் எங்களுக்கு கொட்டேசன் கொடுத்தார்கள் பணமும் அவர்கள்தான் எங்களிடமிருந்து வாங்கினார்கள். பில்லும் அவர்கள்தான் எங்களுக்கு கொடுத்தார்கள். கூட்டு நிறுவனம் மூலம் எந்திரங்களை வாங்குவதற்கு முன்பாக நான் ஒரு ஏழை நெசவாளி என்றால் சரியல்ல. எங்கள் நிறுவனத்திடம் 1 முதல் 3 பிரதிவாதிகளிடமிருந்து நாங்கள் வாங்கிய ரூபாய் 8 லட்சத்தை திருப்பி கேட்டதால்தான் இவ்வாறு வழக்கு தாக்கல் செய்திருப்பதாக சொன்னால் சரியல்ல. மத்திய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததற்கு பின்னர் எவ்வளவு நாட்கள் கழித்து வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தீர்கள் என்றால் அதற்கும் முன்பாகவும் கொடுத்திருக்கிறோம் பின்பாகவும் கொடுத்திருக்கிறோம். எந்திரங்களை பொறுத்திய பின்னர்அவைகள் நீங்கள் எத்தனை நாட்கள் இயக்கினீர்கள் என்றால் ஒருமணி நேரம் கூட ஓடவில்லை. உடனடியாக அன்றைய தினமே 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு புகார் கொடுத்தீர்களா என்றால் போனில் பேசினேன். இயந்திரங்களை இயக்குவதற்கு எனக்கு ஒருநாள் பயிற்சி போதாது என்றால் சரியல்ல. இதற்கும் முன்பாக இதே மாதிரியான எந்திரங்களை இயக்கி இருக்கிறீர்களா

என்றால் இல்லை. பிராதில் ஜெனரேட்டரை விற்பனை செய்துவிட்ட விபரத்தை



சொல்லாததற்கு காரணம் இருக்கிறதா என்றால் அது பற்றி நான் யோசிக்கவில்லை. ஜெகதீஸ் பெயரில் எவ்வளவு சொத்து இருக்கிறது என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அவர் எனக்கு 10 வருடங்களாக பழக்கமானவர். ஜெகதீஸ் எங்கள் நிறுவனத்திலிருந்து விலகிய பின்னர் தான் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்பது சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்த சமயங்களில் ஜெகீதிஷ் எங்கள் நிறுவனத்தில் பார்ட்னராக இருந்தார். நீதிமன்ற கட்டணம் விலக்கு கோருவதற்காகத்தான் ஜெகதீஸ் எங்கள் நிறுவனத்தை விட்டு விலகி விட்டதாக சொல்லி ஒரு விடுதலை ஆவணம் பெயரளவில் வாங்கியிருக்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் வாதி ராஜேஸ்வரி பெயரில் எவ்வளவு சொத்து இருக்கிறது என்று தெரியுமா என்றால் அவர் பெயரில் சொத்து இல்லை. 2ம் வாதியின் பெயரில் சொத்து இருப்பதாகவும் அதனால்தான் முதல்வாதி நிறுவனத்தின் பெயரில் இந்த வழக்கு தாக்கல் செய்திருப்பதாக சொன்னால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள் மேற்படி எந்திரங்களுக்கான சர்வீஸ் ஏஜெண்ட் மட்டும் தான் என்றால் முழுப்பொறுப்பும் அவர்கள்தான். மேற்படி எந்திரங்களின் இன்றைய மதிப்பு என்ன என்றால் காய்லாங்கடைக்கு போகக்கூடிய மதிப்புதான். 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக எந்திரங்களை பொறுத்து என்னால் நஷ்டஈடு கேட்பதற்கு முகாந்திரம் இல்லை என்றால் 21-6-2016 அன்றைய தேதியில் மெசின் ரிப்பேர் செய்து தரவோ இலவச மெசின் மாற்றி கொடுக்கவோ அல்லது மெசினுக்கு உண்டான தொகையை கொடுத்து விடுகிறோம் என்றும் லட்டர் கொடுத்திருக்கிறார்கள். நீங்களோ உங்கள் நிறுவனமோ வருமான வரி செலுத்துகிறீர்களா என்றால் பான்நெம்பர்இருக்கிறது. வருமான வரி செலுத்துவதில்லை. எந்திரங்களை இரண்டு மாத காலம் இயக்கிவிட்டு தான் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக எந்திரங்கள் பழுது என்று புகார் செய்து வருகிறேன் என்றால் நான்கு முறை நேரில் போய் சொல்லியிருக்கிறேன் அவர்கள் வராததால் நான் நோட்டீஸ் கொடுத்தேன். பிராதில் 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் நேரில் பலமுறை கேட்டதாக சொல்லியிருக்கிறீர்களா என்றால் ஞாபகமில்லை. எந்திரங்களை பழுது பார்க்க 1 முதல் 3 பிரதிவாதிகள் சீனாவிலிருந்து எஞ்சினியர்களை வரவழைக்க ஏற்பட்ட செலவினங்களை 1 முதல் 3 பிரதிவாதிகள்தான் ஏற்றுக்கொண்டார்கள் என்பதுதெரியுமா என்றால் தெரியாது. அதற்காக நீங்கள் எதுவும் செலவு செய்தீர்கள் என்றால் எங்கள் இடத்திற்கு வந்த போது டிபன் கொடுத்தோம். சீன எஞ்சினியர்களை எந்திரங்களை பார்க்க அனுமதித்தால் அவைகள் நல்ல நிலையில் இருப்பது தெரிந்து விடும் என்பதால்தான் அவர்களை எந்திரங்களை பார்க்க நான் அனுமதிக்க வில்லை என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள் ஜெகதீஸ்

மூலம்எங்களுக்குகொடுத்த ரூபாய் 8 லட்சத்தை மோசடி செய்யும்நோக்கத்தில் ஜெகதீசை



எங்கள் நிறுவனத்திலிருந்து நீக்கியிருப்பதாக சொன்னால் சரியல்ல. அதன் பின்னரும் ஜெகதீஸ் 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் ரூபாய் 50 ஆயிரம் பணம் வாங்கி எங்கள் நிறுவனத்திற்கு கொடுத்திருக்கிறார் என்றால் தவறு. 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக நஷ்டஈடு உள்ளிட்ட எந்தவித பரிகாரமும் என்னால் கேட்கப்படுவதற்கு முகாந்திரம் எதுவும்இல்லை முழுஅருகதையும் உண்டு.

4 ம் பிரதிவாதியின் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/-Rajendran

Sd/- Tr.P.Elango
III ADJ Salem